★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: புரட்டாசி 14உ சனி (29—9—56) ★ ★ வெளியூர் : புரட்டாசி 15உ ஞாயிறு (30—9—56) [இதழ் 95

ரூ. 23 கோடி செலவில் வடக்கே புதியவெடிமருந்துஉற்பத்திச்சாலை

★

சந்தவாரா, செப். 29—

பந்தாராவிலிருந்து ஐந்து மைல் தூரத்திலும், பெயின் கங்கா நதிப் பிரதேசத்திற்கு அருகிலுமுள்ள 5 மைல் பரப்பு நிலம், வெடி மருந்து உற்பத்திச்சாலைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

இந்த இடத்தில் வெடி மருந்து உற்பத்திச்சாலை அமைப்பதை மத்திய அரசாங்கம் அனுமதித்து, அதற்காக ரூ. 23 கோடி செலவு செய்யும் என்று தெரியவருகிறது.

மக்கள் அன்பே மதிப்பான பரிசு

பொதுத் தொண்டர் பெறும் பேறு அதுவே!

அண்ணுதுரைக்கு ஊக்கம்தருகிறேம்

மேலும் தொண்டாற்ற உற்சாகம் பெறுகிறர்

படத் திறப்புவிழா: ராசன் கனிவுரை

வாழ்த்தளித்து வழிவகை கூறுகிறர்

"நான் இந்த நகருக்குப் புதியவன் அல்ல; இன்று, இந்த வேலூர் நகரசபையில் திருவாளர் அண்ணுதுரையின் படத்தைத் திறந்து வைக்க வேண்டும் என்று என்னைக் கேட்டதுடன், எனக்கு ஒரு வரவேற்புப் பத்திரமும் வாசித்துக் கொடுத்திருக்கிறர்கள். என்னை முதலில் அழைத்தபோது நான் 'எனக்கொன்றும் வரவேற்புப் பத்திரம் தேவை இல்லை; அண்ணுதுரையின் படத்தை மட்டும் மகிழ்வுடன் திறந்துவைக்கிறேன்' என்று கூறினேன்; ஆனல், நகர சபையினர், நான் முதலில் கூறியதைக் கவனிக்க மறந்துவிட்டு, எனக்கு இங்கே வரவேற்புப் பத்திரம் அளித்தார்கள். அதில் என்னைப் பற்றிப் பலபடப் பெருமையாகக் கூறியுள்ளனர். சாதாரணமாக—சம்பிரதாயத்திற்காக நான் பதில் கூறவேண்டுமானல், பத்திரத்தில் கூறப்பட்டிருக்கும் புகழ் மொழிக்கெல்லாம் நான் பாத்திரமானவன் அல்ல என்றுதான் கூறவேண்டியிருக்கும்; ஆனல் பத்திரத்தில், என்னைப் பற்றிப் பெருமையாக ஏதேதோ எடுத்துரைத்திருப்பதுடன் நில்லாது, சில விஷயங்களைப் பற்றியும் என்னைக் கருத்தறிவிக்குமாறு கேட்டிருக்கிறர்கள்.

"இங்கு, திருவாளர் அண்ணுதுரை அவர்களது படத்தை நான் திறந்துவைக்க வேண்டும் என்று கேட்டபோது, நான் சந்தோஷத்தோடு ஒப்புக்கொண்டு அந்தப் பணியை நிறைவேற்றினேன்.

"சாதாரணமாக, உயிரோடிருப்பவர்களது படங்களைத் திறந்து வைத்துப் பேசுவது எனக்குப் பழக்கமில்லை; ஆனல், இம்முறை ஒப்புக்கொண்டேன் — ஒவ்வொரு சட்டத்திற்கும் விதிவிலக்கு உண்டல்லவா?

"இன்று நாட்டில் பல ஸ்தாபனங்கள் இருக்கின்றன; இயக்கங்கள் இருக்கின்றன. அந்த ஸ்தாபனங்களுக்கும், இயக்கங்களுக்கும தலைவர்கள் இருக்கிறர்கள்; அப்படிப்பட்டத் தலைவர்களிலெல்லாம் திருவாளர் அண்ணுதுரை அவர்கள் வயதில் சிறியவர்; ஆனல், வயதில்தான் சிறியவரே தவிர, அனுபவத்திலும், புத்திசாலித்தனத்திலும் வயது முதிர்ந்தவர்; நன்ருகப் பேசவும் எழுதவும் ஆற்றல் படைத்தவர்.

"பேசத் தெரிந்தவர் என்று சொல்லும்போது, அவர் தரம் குறையாமல், தாழ்நிலைக்குச் செல்லாமல் பேசுபவராவார்.

"இந்தக் காலத்தில் பேசத் தெரிந்த சிலர் ஏதாவது இடக்கு இல்லாமல் பேசமாட்டார்கள். சிலர், பிறத்தியாரைக் கேவலமாகப் பேசினல் தான் பேசியதாக அர்த்தம் என்று கருதுகிறர்கள்; அது தவறு பேசுபவர்களுக்கு அடக்கம் வேண்டும்; அடக்கம் இல்லாவிட்டால் எத்தனைதான் பேசத் தெரிந்தாலும் பெரிய மனிதர்களாகிவிட முடியாது. இந்தக் கருத்து, பழங் காலத் தமிழகக் கருத்தாகும்.

"இந்த அடக்கம் மிக்கவர் திருவாளர் அண்ணுதுரை;

(4-ம் பக்கம் பார்க்க)

தூத்துக்குடிக்கு அண்ணு என். வி. நடராசன் புறப்பாடு

சென்னை, செப் 29—

கே வி கே சாமியின் மறைவை முன்னிட்டு 30-9-56 அன்று தூத்துக்குடியில் நடைபெறவிருக்கும் அனுதாபக் கூட்டத்தில் பங்கு கொள்ளவும், தூத்துக்குடியிலுள்ள கழகத் தோழர்களுக்கு ஆறுதல் கூறவும், மற்ற நண்பர்களைக் கலந்து பேசவும் அண்ணு அவர்கள், துணைப்பொதுச் செயலாளர் என் வி. நடராசன் அவர்களுடன் இன்று பிற்பகல் 1-மணிக்குத் தலைமை நிலையத்திலிருந்து காரில் புறப்பட்டுச் சென்ருர்கள்.

இன்றிரவு மதுரையில் தங்கியிருந்து 30-9-56 அதிகாலையில் புறப்பட்டுத் தூத்துக்குடிக்கு 11 மணி அளவில் போய்ச் சேருவார்கள்.

மதுரையிலிருந்து மாவட்டச் செயலாளரும், மத்தியச் செயற்குழு உறுப்பினருமான தோழர் எஸ் முத்து அவர்களும் உடன் செல்லுவார்.

30-9-56 அன்று பிற்பகல் 4 மணிக்கு, கே. வி. கே. சாமியின் பிரேதம் அடக்கம் செய்யப்பட்டுள்ள இடத்திற்குச் சென்று அண்ணு அவர்களும், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களும் மற்ற தோழர்களும் தங்களின் இறுதி வணக்கத்தைச் செலுத்துவார்கள்.

மத்திய அரசாங்கம் உதவியளிக்குமா என்ற ஐயப்பாடு இருக்கிறதாம்!

என். ஜி. ஓ.-க்களுக்கு இடைக்கால நிவாரணம் அளிக்கும் அவசியம் எழவில்லையாம்!

சென்னை சட்டசபையில் நிதி அமைச்சர் கூறுகிறர்

சென்னை, செப். 27—

இடைக்கால நிவாரணம் வேண்டும் என்று என். ஜி. ஓ.-க்கள் கேட்டிருந்தனரல்லவா? அதைக் குறித்து சட்டசபையில் கேள்வி கேட்டதற்கு, 'என். ஜி. ஓ.-க்களின் 'கிராக்கிப் படி'யை நிர்ணயிப்பதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள குழுவின் அறிக்கை விரைவில் கிடைக்கப்போவதால் இடைக்கால நிவாரணம் அளிக்க அவசியம் எழவில்லை' என்று நிதி அமைச்சர் பதிலளித்துள்ளார்.

குறைந்த ஊதியம் உள்ளவர்களுக்கு உதவி செய்ய அரசாங்கம் விரும்புகிறதாம்; ஆனல் அவரிடம் நிதி குறைவாகயிருக்கிறதாம்!

மேலும் மத்தியசர்க்காரிடமாவது மானியம்கோரி வல்லது செய்யலாம் என்ருலும், மத்திய அரசாங்கம் உதவியளிக்குமா என்ற ஐயப்பாடு தனக்கு இருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மணமான மங்கைக்குப் 'பேய்' பிடித்ததாம்!

சூலத்தால் குத்தப்பட்டு பெண் மாண்ட பரிதாபம்

திப்ருகர், செப். 20—

மணமான ஒருமங்கைக்குப் 'பேய்' பிடித்திருப்பதாகக் கருதி பேயை ஓட்ட சிவன் கோயிலுக்குக் கொண்டு வந்தனராம்.

பேய் ஓட்டுவதில் பெயர் பெற்ற ஒரு மாது பல சடங்குகளுக்குப் பிறகு 'சூலம்' ஒன்றினல் அந்தப் பெண்ணைக் குத்திவிடவே அம் மங்கை அங்கேயே மாண்டு விழுந்தாராம்.

மறைந்த மாவீரனுக்கு மரியாதை-அஞ்சலி

தூத்துக்குடி நகரசபையில் அனுதாபம்

(டிரங்க் டெலிபோன் செய்தி)

கே. வி. கே. சாமி படுகொலை செய்யப்பட்டது தூத்துக்குடியில் பொதுமக்கள் மனதை வெகுவாக வேதனைக்குள்ளாக்கி இருப்பதுடன், அனைவரும் மறைந்த மாவீரனுக்கு மரியாதையை—அஞ்சலியைச் செலுத்துவதில் உருக்கம் காட்டுகின்றனர்.

தூத்துக்குடி நகராட்சி மன்றம், அனுதாபக் கூட்டம் நடத்தி இருக்கிறது.

நகராட்சி மன்ற உறுப்பினராக இருந்து நற்பணியாற்றி வந்த கே.வி. கே. சாமியின மறைவு குறித்து மனமுருகிப் பேசியதுடன், நகராட்சி மன்றம தன் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டது.

நிறைவேற்றப்பட்ட அனுதாபத் தீர்மானத்தின்மீது, நகராட்சி மன்ற உறுப்பினர்களில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் மூவரும், கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர் ஒருவரும் பேசினர்.

நகராட்சி மன்றத் தலைவர் மாசிலாமணி அவர்கள் தலைமை வகித்தார்.

அனுதாபம் தெரிவித்துப் பேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் துணைத் தலைவர் சங்கர நாராயணன், இராமய்யா, அகஸ்டின் ஆவர்.

மேற்படி தீர்மானம் பற்றிப் பேசிய கம்யூனிஸ்டு உறுப்பினர் எஸ். எஸ். மாணிக்கம் ஆவார்.

18,000 பவுன் நன்கொடை

வேலூர் மருத்துவக் கல்லூரி — விடுதிக்கு வெளிநாட்டவர் உதவி

புதுடில்லி, செப். 27—

வேலூரில் உள்ள கிறித்தவ மருத்துவக் கல்லூரிக்கும், மருத்துவ விடுதிக்கும் 'வெப்பீல்டு நிறுவனம்' 18,000 பவுன் நன்கொடை அளித்திருப்பதாகவும், கிராம மக்களுக்கு மருத்துவ உதவியளிக்கவே இத்தொகையை முதன்மையாகப் பயன்படுத்த வேண்டும் என்றும் இந்த நன்கொடை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறதாம்.

வடக்கு எல்லை மீட்புக் கிளர்ச்சி

கவிஞர் கா. மு. ஷெரீப் தலைமையில் 65 பேர் கைது

சென்னை, செப். 29—

வடக்கு எல்லை மீட்புக்காகத் தமிழரசுக் கழகத்தவர் நடத்தும் மறியல் கிளர்ச்சி இன்றும் ஆறும நாளாக நடைபெற்றிருக்கிறது; இன்று, கவிஞர் கா. மு. ஷெரீப் அவர்களும், மற்றும் 65 பேரும் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

இன்று காலை 9 மணியளவில் கிளர்ச்சி துவங்கிற்று.

கவிஞர் கா. மு. ஷெரீப் தலைமையில், 'செங்கோல்' மானேஜர் கணபதி, தோழர் முருகன் உள்ளிட்ட 65 தோழர்கள் மறியலில் ஈடுபட்டனர்.

அவர்கள் அனைவரையும் போலீசார் கைது செய்து காவலில் வைத்துள்ளனர்.

இந்தத் தகவல் வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழு அலுவலகத்திலிருந்து அறிவிக்கப்படுகிறது.

டில்லி ஆட்சியினருக்கு ஆலோசனை கூறுவாராம்!

சென்னை, செப். 27—

மிளகுக்குப் புதிய உலக 'மார்க்கெட்' கண்டுபிடித்துத் தருமாறும், மிளகு தரம் பிரித்தலை அமுல் செய்யுமாறும் மத்திய அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறப்போவதாக சென்னை விவசாய அமைச்சர் பக்தவத்சலம் சட்டசபையில் கூறியுள்ளார்.

மிளகு விலை குறைவதைத் தடுக்கவே இந்த முயற்சி எடுக்கப்படுகிறதாம்.

ரூ. 4,60,000 செலவில் தீக்குச்சித் தொழிற்சாலை

உற்பத்தி ஆரம்பமாகிவிட்டது

சென்னை, செப். 27—

ரூ.4,60,000 செலவில் சென்னை அரசாங்கம் ஆரம்பித்துள்ள தீக்குச்சித் தொழிற்சாலையில் கடந்த மாதம் 25-ந் தேதியிலிருந்து உற்பத்தி ஆரம்பமாகிவிட்டதாம்

ஆண்டிற்கு 5 இலட்சம் குரோஸ் தீக்குச்சி தயாரிக்கப்படுமாம் தற்போது தினசரி 150 குரோஸ் தயாராகிறதாம். 40 குச்சிகள் கொண்ட பெட்டிக்கு அரையணு விலை வைக்கப்பட்டு, 'டைகர் மார்க்கு' என்று பெயர் வைக்கப்பட்டுள்ளதாம்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாயத் துறையில் மீன் வளர்ப்புத் திட்டத்தை அமுல் நடத்துவதற்கு இந்திய அரசாங்கம் ரூ. 1,24,20,000 ஒதுக்கியிருப்பதாக சென்னை விவசாய அமைச்சர் பக்தவத்சலம் சட்டசபையில் தெரிவித்துள்ளார்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 29-9-'56 சனி

ஓரவஞ்சனை

“தொழில் துறை வளர்ச்சியில் தென்னாடு மிகவும் பின்தங்கி இருக்கிறது என்பதில் இரண்டுபட்ட கருத்தே இருக்க முடியாது. வெறும் பிரச்சார வசதிக்காகக் கற்பனை செய்யப்பட்ட சுலோகம் அல்ல இது. மத்திய அரசாங்க நிதி அமைச்சராலேயே ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற அழுத்தம் திருத்தமான உண்மை இது.”

—நிதியமைச்சர் சுப்பிரமணியம் (7—7—56)

“உயர்தரத் தொழிற்கல்வி நிறுவனங்கள் 18 ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதில், தென் பிரதேசத்திற்கு ஒரு நிறுவனம் மட்டும்தான் ஒதுக்கப்பட்டுள்ளது. இது மிகவும் அதிருப்திகரமான விஷயம்.”

—நிதியமைச்சர் சுப்பிரமணியம் (30—8—56)

“இதர இராஜ்யங்களைவிட சென்னை இராஜ்யம், தொழில் விஷயத்தில் மிகவும் பின்னேக்கி இருக்கிறது.”

—முதலமைச்சர் காமராஜர் (26—8—56)

தொழில் துறையில், தென்னாட்டை இந்தியத் துணைக்கண்டத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, தென்னகம் எந்த அளவில் பின்தங்கிக் கிடக்கிறது என்ற உண்மையை உணர்ந்துகொள்ள மேற்குறிப்பிட்டக் காங்கிரஸ் அமைச்சர்களின் அரிய வாசகங்களே போதுமானதாகும். அதுவுமன்றி, தொழில் துறையில் தென்னாட்டை ஓங்கவிடாமல் பார்த்துக்கொள்ளுவதில் இந்தியப் பேரரசு வேண்டுமென்றே நடந்துகொள்ளுகிறது எனப் பொருள்படுமபடியாகவும் தொழிற் பள்ளி நிறுவுவதுபற்றி நிதி அமைச்சர் எழுப்பியுள்ள குரல் அமைந்திருக்கிறது.

இதே கருத்தைத்தான், கொஞ்சம் தெளிவாகவும், தக்க எடுத்துக்காட்டுகளுடன் திட்டவட்டமாகவும் நாம கூறி வருகிறோம்.

தாங்களாகக் குறைகூறுகிறவர்கள், அதையே நாம் கூறுகிறபொழுது நம்மீது சீற்றங்கொள்ளுகிறார்கள் — சீறுகிறார்கள்.

இந்தியப் பேரரசின் ஓரவஞ்சனையையும், தென்னாட்டின தொழிலற்றத் தன்மையையும் எடுத்துக் காட்டக்கூடிய உரிமை தங்களுக்கு மட்டுமே உண்டு; அவ்வுரிமை மற்றவர்களுக்குக் கிடையாது என எண்ணிக் கிடப்பதினாலேயே அவர்கள் கூறுவதையே நாம் திரும்பக் கூற முன்வரும்பொழுது அவர்களுக்கு நம்மீது கடுங்கோபம் பிறக்கின்றது போலும்! நிற்க,

சேலம் பகுதியில் உயர்தரமான பாக்சைட் இருக்கிறது என்பது பல ஆண்டுகாலமாகவே தெரிந்திருக்கும் உண்மையாகும். அதைப பண்படுத்திப் பயன்படுத்தக்கூடிய பண்டங்களாக ஆக்குவதற்கு ஒரு தொழிற்சாலையைத துவங்க வேண்டும என்ற தேவையை, காங்கிரஸ் ஆட்சியாளர்கள் ஏற்கனவே தாமாக உணர்ந்திருக்க வேண்டும்.

தாமாக உணரவில்லையானாலும், மற்றவர்கள் உணர்த்த முன்வருகிறபொழுதாவது ஆட்சியாளர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். உணர்ந்த பிறகு, உணர்ந்த அளவுடன் நின்றுவிடாது, தேவையை நிறைவேற்றத் திட்டமிட்டுச் செயலிலிறங்க வேண்டும்.

இப் பொதுவிதியை மதித்து, திட்டமிட்டுச் செயலில் இறங்குவதில் இந்தியப் பேரரசு மற்ற நாட்டு அரசுகளுக்குப் பின்தங்கிவிட்டதாகக் குற்றஞ் சொல்வதற்கில்லை. ஆனால் இவ்வாறு திட்டமிட்டுச் செயல்படுவதில் முன்னணியில் இருந்து வருகிற இந்தியப் பேரரசு, தென்னாட்டின் தொழில்துறை முன்னேற்றத்தில் மட்டும், அப்பொது விதியை அலட்சியப்படுத்தி வருகிறது—அதுவும் வேண்டுமென்றே புறக்கணித்து வருகிறது.

சேலத்தில் பாக்சைட் கிடைக்கும் பகுதியில், அந்தப் பாக்சைட்டைக்கொண்டு, அலுமினியப் பொருட்களை உற்பத்திச் செய்ய இந்தியப் பேரரசு, ஏற்கனவே அப்பகுதியில் அலுமினியத் தொழிற்சாலை ஒன்றைத் துவங்கி இருக்க வேண்டும். அதுவே, அதன் பேதமற்ற விரிந்த தேசிய மனப்பாங்கிற்கு நற்சாட்சியாகும்.

ஆனால், உயர்தர பாக்சைட் கிடைக்கும் சேலத்தில் ஒரு தொழிற்சாலையை நிர்மாணித்து, அப்பொருளைப் பயன்படுத்தி அலுமினியப் பொருட்களை உற்பத்திச் செய்வதற்குப் பதிலாக, அங்கு கிடைக்கும் பாக்சைட்டைத் தோண்டி எடுத்து, எங்கோ பீகாரிலும், மேற்கு வங்கத்திலும் நிர்மாணிக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளுக்குக்கொண்டு செல்வதை வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்கிறது, இந்தியப் பேரரசு. அந்த அளவுடனும் நின்றுவிடவில்லை இந்தியப் பேரரசு. சேலத்து பாக்சைட் கப்பலேறி வெளிநாடு செல்வதையும் அனுமதித்துக் கொண்டுஇருக்கிறது அவ்வரசு.

பீகாரிலும், மேற்கு வங்கத்திலும் உள்ள அலுமினியத் தொழிற்சாலைகளுக்கும் வெளிநாடுகளுக்கும் சேலத்திலிருந்து பாக்சைட் அனுப்பப்பட்டு வருவதற்கும், இந்தியப் பேரரசிறகும் எந்தவிதத் தொடர்பும் இருக்கவில்லை என இந்தியப் பேரரசின் சார்பில், சில எத்தர்கள் சமாதானம் கூற முன்வரலாம். ஆனால் அந்தச் சமாதானம், குறைகூறுவோரின் வாயை மூடத் தற்காலிகமாகப் பயன்படுவதுடன், இந்தியப் பேரரசின் அலட்சிய புத்தியை எடுத்துக் காட்டவும் பயன்படுவது நிச்சயம்.

சேலம் பாக்சைட்டைப் பயன்படுத்த அப்பகுதியிலேயே ஒரு தொழிற்சாலையைத் துவக்க, இரண்டாவது திட்டத்திலாவது ஒரு ஏற்பாட்டைச் செய்ய இந்தியப் பேரரசு முன்வந்து இருக்க வேண்டும். தென்னாட்டின் தொழிலபிவிருத்தியில் இந்தியப் பேரரசிற்கு உண்மையிலேயே நல்லெண்ணம் இருக்குமானால், பாக்சைட் கிடைக்கும் பகுதியான சேலத்தில் ஒரு அலுமினியத் தொழிற்சாலையைத் துவங்குவதில் தாமதமோ தயக்கமோ காட்டாது, இரண்டாவது திட்டத்தில் அதற்கான ஒரு ஏற்பாட்டைச் செய்வதுதான் நியாயமாகும் என எவரும் கூறுவர். ஆனால், இந்தியப் பேரரசோ, நல்லறிவாளர்கள் எதிர்பார்ப்பதுபோல் இல்லாமல், இராகுட் பகுதியில் ஆண்டு ஒன்றுக்குப் பத்தாயிரம் டன் உற்பத்தி செய்யக்கூடிய அலுமினியத் தொழிற்சாலை ஒன்றைத் துவங்கத் திட்டமிட்டிருக்கிறது.

இந்தியப் பேரரசின் இவ்வேற்பாட்டின்படி, சேலத்தின் உயர்தரமான பாக்சைட், இதுவரை பீகாருக்கும், மேற்கு வங்காளத்திற்கும் கடத்திச் செல்லப்பட்டதுடன் நிற்காமல், இராகுட்டுக்கும் கடத்திச் செல்லப்படும் என்பது தெளிவாகிறது.

சேலத்திலேயே அலுமினியத் தொழிற்சாலை ஒன்று துவங்கப்பட்டு, அங்கு கிடைக்கும் பாக்சைட்டைப் பயன்படுத்தினால், உலக அலுமினிய விலையுடன் இந்தியா போட்டியிடுவது சாத்தியமாகும் என, தால்மியா நிறுவனத்தின் நிர்வாகியான இராய் என்பார் கூறுகிறார். ஆனால், இந்தியப் பேரரசோ, சேலத்து பாக்சைட்டை இராகுட்டிற்குக் கடத்திச் சென்று, அலுமினியப் பண்டங்களை உள்நாட்டில் அதிக விலைக்கே விற்க வகை செய்ய முந்துகிறது.

இந்தியப் பேரரசின் இத் தொழில் மனப்போக்கைத்தான் ஓரவஞ்சனை என்கிறோம். தென்னாட்டில் தொழில் வளர்ச்சியைத் திட்டமிட்டு இந்தியப் பேரரசு கெடுத்து வருகிறது என்றும் வெளிப்படையாகக் குற்றஞ் சாட்டுகிறோம்.

‘குளிர்சாதன’ வசதியுள்ள இரயில் பெட்டிகள்

புதுடில்லி, செப். 26—

குளிர் சாதன வசதி கொண்ட 3-ம் வகுப்பு இரயில் பெட்டிகள் அக். 2-ந் தேதியன்று டில்லி ஹௌரா பிரிவில் இணைக்கப்படுமாம்.

வேலூர் நகராட்சி மன்றத்தில் அண்ணா படத்திறப்பு

வேலூர் (வ. ஆ.) நகராட்சி மன்றத்தில் அண்ணா அவர்களின் உருவப் படத்தை திரு. பி.டி. இராசன் அவர்கள் கடந்த 26-ந் தேதியன்று திறந்துவைத்தபோது எடுத்த படம்.

வேலூர் நகராட்சி மன்றத்தில் அண்ணா அவர்களின் உருவப் படம்

தமிழவேள் பி. டி. இராசன் திறந்துவைத்தார்

ஆயிரக்கணக்கான மக்கள் வாழ்த்து

(நமது தனி நிருபர்)

வேலூர், செப். 27—

வேலூர் (வ. ஆ.) நகராட்சி மன்றத்தில், அண்ணா அவர்களது உருவப் படம், நீதிக் கட்சித் தலைவர்—தமிழ் நாட்டின் பண்பாளர் திரு. பி. டி. இராசன் அவர்களால் நேற்று மாலை திறந்து வைக்கப்பட்டது; கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள், பேராரவாரம் செய்து வாழ்த்துக் கூறினர்.

விழாவினை ஒட்டி, நகரசபை அலுவலகத்தில் உள்ள திறந்த வெளியில் சிறப்பான பந்தல் ஒன்று எழுப்பப்பட்டிருந்தது; பந்தலும் மேடையும், அலுவலக நுழைவுவாயிலும் தோரணங்களாலும் மின்னொளி விளக்குகளாலும் உன்னதமாக அலங்கரிக்கப்பட்டு, விழாவிற்கு எழிற்கோலமளித்துக் கொண்டிருந்தன.

மாலை 4 மணி முதலே மக்கள், நகரசபை அலுவலகத்தில் கூடினர்.

ஏராளமான தாய்மார் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் அலுவலகத்தின் உள்ளும் புறமும் திரண்டிருந்தனர்.

விழா சரியாக மாலை 5-15 மணிக்குத் துவங்கிற்று; திரு பி. டி. இராசன் அவர்கள் அலுவலகம் வந்ததும் அவரை நகரசபைத் தலைவர் மாலையிட்டு வரவேற்றார்.

நகராட்சி மன்ற உறுப்பினர்கள் அனைவரும் திரு. பி. டி. இராசன் அவர்களுடனிருந்து புகைப்படம் எடுத்துக்கொண்ட பின்பு, திரு இராசன் அவர்கள் மேடைக்கு அழைத்துவரப்பட்டார்.

அவருக்கு எல்லா நகரசபை உறுப்பினர்களையும் அதிகாரிகளையும் நகராட்சி மன்றத் தலைவர் திரு. சீதாபதி அவர்கள் அறிமுகம் செய்துவைத்தார்.

அடுத்து, திரு இராசன் அவர்களுக்கு நகரசபை சார்பில், தலைவா வே. ரா. சீதாபதி அவர்கள் ஒரு நல்வரவேற்புஇதழ் வாசித்தளித்தார். பின்னர், அண்ணா அவர்களின் உருவப் படத்தைத் திறந்து வைக்குமாறு திரு இராசன் அவர்களை தலைவர் கேட்டுக்கொண்டார்.

திரு பி. டி. இராசன் அவர்கள் கூடியிருந்தோரின் பெரு மகிழ்ச்சி ஆரவாரப் பேரொலிக்கிடையே அண்ணா அவர்களின் உருவப் படத்தைத் திறந்துவைத்து அதனை கணநேரம் உற்று நோக்கிவிட்டு, தமது உள்ள நிறைவை—மகிழ்வைத் தெரிவித்தார்.

கூடியிருந்தோரது உற்சாகமும் ஆர்வமும், மகிழ்ச்சியும் எல்லை கடந்திருந்த நிலையில் திரு பி. டி. இராசன் அவர்கள் ஒலிபெருக்கி முன் வந்தார்கள்.

அப்போது நிலவிய அமைதி திரு. இராசன் அவர்கள் சொற்பொழிவாற்றிய ஒன்றரை மணி நேரமும் நின்று நிலவியது.

அண்ணா அவர்களைப் பற்றிய தனது கருத்தையும், நகரசபையினர் வரவேற்பிதழில் குறிப்பிட்டிருந்த ‘நல்லாட்சி தேவை’ என்ற ‘கோரிக்கை’ பற்றியத் தனது தெளிந்த எண்ணத்தையும் எடுத்துரைத்துவிட்டு, வரவேற்பளித்தும், அண்ணாவின் உருவப் படத்தைத் திறந்துவைக்கும் வாய்ப்பு அளித்தமைக்கும் நன்றி கூறிக்கொண்டு திரு. இராசன் அவர்கள் அமர்ந்தார்கள்.

நகராட்சி மன்ற உறுப்பினர் தோழர் மா. பா. சாரதி அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார். விழா 7-30 மணியளவில் முடிவுற்றது.

எழிலுடனும் கவர்ச்சிகரமாகவும் எழுதப்பட்டிருந்த உருவப்படத்தை வேலூர் ‘மெட்ராஸ் போட்டோ நிலைய’ உரிமையாளர் திரு. வரதராசன் அவர்கள்தான் திறம்பட எழுதியிருந்தார்.

நகரசபைக்கு இந்த சிறந்த ஓவியத்தை அன்பளிப்பாக வழங்கியவர் தோழர் ரங்கநாதன் அவர்களாவார்.

அவர்கள் இருவருக்கும் நகரசபைத் துணைத்தலைவர் மாலைகள் அணிவித்து, நகர மன்றத்தின் நன்றியைத் தெரிவித்துக்கொண்டனர்.

லண்டன், செப். 27—

மத்திய ஆஸ்திரேலியாவில் பிரிட்டன் நடத்தும் சோதனைகளில் முதல் அணுகுண்டு இன்று வெடிக்கப்பட்டதாம். இந்த சோதனை 11 முறை ஒத்திவைக்கப்பட்டிருந்ததாம். இந்த சோதனை முழு வெற்றியளித்துள்ளதாம்.

'கொள்கை வீரர்கள் கொலைக்களத்'திற்கு

அழைத்துச் செல்லப்பட்டாலும்....

கரூரில் தில்லை-வில்லாளன் உருக்கமிக்க பேச்சு

"மறைந்த தோழர் கே வி. கே. சாமி அவர்கள் 15 ஆண்டுகளுக்கு மேலாகப் பொதுப் பணி ஆற்றி வந்திருக்கிறார். அவருடைய மறைவு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஈடுசெய்யப்பட முடியாத ஒரு பேரிழப்பாகும். மக்களுக்குத் தொண்டு செய்யும் சாமி போன்ற மாவீரர்களுக்கு இத்தகுக் கொடுமை விளையதென்றால் அது மிகவும் வருந்தற்குரியதாகும்.

"இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நமக்கொன்றும் புதிதல்ல; சென்னையில் பாண்டியனையும், உடையார்பாளையத்தில் வேலாயுதத்தையும், நெல்லிக்குப்பத்தில் மஜீதையும் நாம் பறிகொடுத்திருக்கிறோம்; இன்னும் பல கொள்கை வீரர்கள் கொலை செய்யப்பட்டார்கள்; அந்தக் கொள்கை வீரர்களெல்லாம் கொலைக்களத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டபோதிலும், கழகக் கொள்கைகள் மாண்டுவிடவில்லை; மாறாக, அவை வளர்ந்து ஆயிரமாயிரம் பாண்டியன்களையும், மஜீதுகளையும், வேலாயுதங்களையும நாம் பெற்றிருக்கிறோம்.

"தோழர் சாமி அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்த ஆறுத்துயர் ஒரு புறமிருக்க, அவர் விட்டுச் சென்றப் பணியினைத் தொடர்ந்து எல்லோரும் ஒன்று கூடி செயலாற்றி, நம் திராவிட நாட்டை மீட்டுத் திராவிடருக் காக்கவும், திராவிட மக்கள் நல் வாழ்வெய்தவும் உழைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்."

என்று, தோழர் தில்லை-வில்லாளன் அவர்கள், 22—9—56ல், கரூர் நாகம்மையார் திடலில் தோழர் சாமி அவர்களின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து நடைபெற்றப் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அன்று காலை 9 மணி அளவில் ஒரு மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு, மவுனமாக நகரின் முக்கியத் தெருக்கள் வழியாகச் சென்று நாகம்மையார் திடலை அடைந்தது. பல கட்சியைச் சேர்ந்த தோழர்களும் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். கழகத் தோழர்கள் கருப்புச் சின்னம் அணிந்து, கருப்புக் கொடி ஏந்தி ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். தோழர் சாமி அவர்களின் உருவப்படம் ஊர்வலத்தில், சைக்கிள் ஒன்றின்மீது வைத்து அலங்கரிக்கப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டது. ஊர்வலம் திடலை அடைந்ததும் பி. கே. ஐயா தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் தோழர்கள் தில்லை-வில்லாளன், தில்லை-மறைமுதல்வன், என். ஆர் இராமசாமி, அமிர்தலிங்கம (தி. க.) தட்சிணாமூர்த்தி (கம்.) சுப்பிரமணியம் (சோஷ.) வீரப்பன் (மாணவர்), மற்றும் ஆலைத் தொழிலாளர் சார்பில் ஒருவரும் சொற்பொழிவாற்றினர். கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தோழர் தில்லை மறைமுதல்வன் பேசும்போது, சாமி அவர்களின் மறைவு தி. மு. கழகத்துக்கும், தூத்துக்குடி மக்கள்—குறிப்பாகத் தொழிலாளருக்கும், நெல்லை மாவட்டத்திற்கும், பகுத்தறிவு உலகிற்குமே பெரும் நஷ்டம் என்று குறிப்பிட்டார்.

பள்ளிப்பாளையம்:

26-9-56 மாலை 5 மணிக்கு நடைபெற்ற கழகச் சொற் குழுக் கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேட்டூர் அணை:

24-9-56 மாலை 5 மணிக்கு நடைபெற்றக் கிளைக் கழகச் செயற் குழுக் கூட்டத்தில், அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மறைந்த மாவீரன் கே. வி. கே. சாமிக்கு தோழர்களின் இறுதி மரியாதை

நாடெங்கிலுமுள்ள நமது கழகத் தோழர்களும் அனுதாபிகளும் தோழர் கே. வி. கே. சாமி அவர்கள் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து நிறைவேற்றிய தீர்மானங்கள் முதலியன இங்கு சுருக்கித்தரப்பட்டுள்ளன :—

கரூர் நகரசபை :

26—9—56 மாலை 5 மணிக்கு, கரூர் நகரசபை அவசரக் கூட்டம், தலைவர் திரு இராமானுசம் தலைமையில் நடைபெற்றது. நகரசபை உறுப்பினரான கழகத் தோழர் என். ஆர். இராமசாமி எம். சி அவர்கள், சாமி அவர்களின் மறைவு குறித்து அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றைப் பிரரேபித்தார். தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது; உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிட நேரம் எழுந்து நின்று மௌனம் மேற்கொண்டனர்.

பம்பாய் :

22—9—56ல் சாமி அவர்களின் மறைவுச் செய்தி கிடைத்ததும் அன்றே அனுதாபக் கூட்டம், மௌன ஊர்வலம் நடத்த அனுமதி கேட்டும் போலீசார் மறுத்துவிட்டனர். மறுநாள் நடத்துவதற்கான அனுமதியும் மறுக்கப்பட்டது இதனிடையில், கழகத் தோழர்கள் ஆங்காங்கே வீதிகளில் எழுதியும், சுவரொட்டிகள் ஒட்டியும் பொது மக்களுக்கு மறைவுச் செய்தியை வெளிப்படுத்தினர் 23—9—56 மாலை 7 மணியளவில், நான்குனேரி ஆ. தி. சங்க அலுவலகத்தில் தோழர் தியாகராசன் தலைமையில் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. தோழர் சு.வள்ளிநாயகம் தோழர் சாமி அவர்களின் உருவப் படத்தைத் திறந்து வைத்துப் பேசினார். தோழர்கள் எல் நெல்லைச்செழியன், சி. த. மு இரா ஆரியசங்காரன், பி. எஸ் செல்லையா, சோழன், ம. இரா எ. இரத்தினசாமி ஆகியோர் தோழர் சாமி அவர்களின் கழகத் தொண்டினை விளக்கிச் சொற்பொழிவாற்றினர் தோழர் சாமி அவர்களின் மறைவு குறித்து ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரும், கூட்ட முடிவில் ஊர்வலமாகச் சென்று, சௌந்திரபாண்டியனார் பகுத்தறிவு மன்றத்தில் நடைபெற்ற அனுதாபக் கூட்டத்திலும் கலந்துகொண்டனர்.

குன்றத்தூர் :

22—9—56 மாலை 5 மணிக்கு செங்கற்பட்டு மாவட்டச் செயலாளர் டி. என். சம்பந்தம் தலைமையில் கழகக் கட்டிடத்திலிருந்து மாபெரும் ஊர்வலம் மௌனமாக நடைபெற்றது. மாலை $6\frac{3}{4}$ மணிக்கு நடைபெற்றக் கூட்டத்தில் தோழர்கள் டி. எம். கணபதி, டி. நாகப்பன், பி. பாலசுந்தரம், டி எம் அன்புமணி, எஸ் பி. கே. வேலன், டி. கே. சிவகுமாரன் ஆகியோரும், தோழர்கள் டி. கே. போரூரான் (திருமழிசை தி. மு. க.), சி. இராமலிங்கம் (ஆனாபுத்தூர் தி. மு. க.), முனுசாமி (புத்தவேடு தி. மு. க.), பி. சின்னசாமி (பூவிருந்தவல்லி தி. மு. க.), செற்கற்பட்டு மாவட்டச் செயலாளர் டி. என். சம்பந்தம் ஆகியோர் தோழர் சாமி அவர்களின் படுகொலைக்கு அனுதாபம் தெரிவித்துச் சொற்பொழிவாற்றினர்.

சென்னிமலை:

22-9-56 இரவு 9 மணியளவில் கழகக் கட்டிடத்தில் நடைபெற்ற அவசரப் பொது உறுப்பினர் கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கழகக் கொடிகள் பாதிக் கம்பத்தில் பறக்க விடப்பட்டன. இரண்டு நிமிட நேரம் மௌனமாக நின்று இறுதி மரியாதை செலுத்தப்பட்டது. அனுதாபச் செய்தி ஒன்று தூத்துக்குடிக்குத் தந்தி மூலம் அறிவிக்கப்பட்டது.

திருப்பத்தூர் நகர மன்றம்:

திருப்பத்தூர் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டத்தில் தோழர் சாமி அவர்களின் மறைவிற்கு அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

துறையூர்:

22—9—56 மாலை 5 மணிக்கு பஸ் நிலையத்திலிருந்து தோழர் கண்ணதாசன் தலைமையில் கருப்புக் கொடிகளுடன் ஊர்வலம் நடைபெற்றது. பின்னர் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் அனுதாபம் தெரிவித்துத் தோழர்கள் பேசினதுடன், அனுதாபத் தீர்மானமும்நிறைவேற்றப்பட்டது.

பெங்களூர்- அக்கிபேட்டை

23—9—56 பகல் 12-45 மணிக்கு, கிளைக் கழகத்தில் நடைபெற்றக் கூட்டத்தில் அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சிவகாசி:

23-9-56 மாலை 5-30 மணிக்கு நகர் அம்மன்கோவில்பட்டி தி. மு. கழக உட்கிளைக் கட்டிடத்தில் நடைபெற்றக் கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முதலூர் :

23—9—56-ல் நடைபெற்ற மறுமலர்ச்சி மன்றச் செயற்குழுக் கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கோவை :

23—9—56 இரவு 10 மணிக்கு, 27-வது வட்டம் முத்தமிழ் மறுமலர்ச்சி மன்றச் செயற்குழுக் கூட்டத்தில், அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இரண்டு நிமிட நேரம் மௌனமாக இருந்து இறுதி மரியாதை தெரிவிக்கப்பட்டது.

கரந்தை (தஞ்சை) :

23—9—56 காலை, அன்பு மன்றத்தில் நடைபெற்ற செயற் குழுக் கூட்டத்தில் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

நாகப்பட்டினம் :

கழகக் கட்டிடத்தில் பறந்து கொண்டிருந்த கொடி தாழப் பறக்கவிடப்பட்டது. 23—9—56 காலை 10 மணிக்கு கழகக் கட்டிடத்தில் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் கி மனோகரன், கே. வி இராமன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இரண்டு நிமிட நேரம் மௌனமாக இருந்து இறுதி மரியாதை தெரிவித்துக் கொள்ளப்பட்டது அன்று நடைபெற இருந்த திராவிட நாடு பிரிவினை நாள் விழா, சாமி அவர்களின் மறைவுக்கு அனுதாபக் கூட்டமாக மாற்றப்பட்டது.

கே. வி. கே. சாமி மறைவு :

இரங்கற் செய்திகள்

★

க. அன்பழகன்

நமது அருமைத் தோழர் கே. வி. கே. சாமி படுகொலை செய்யப்பட்ட செய்தியைக் கேள்விப்பட்டபோது என்னால் நம்பவே முடியவில்லை இளமையும், எழுச்சியும், ஏறு நடையும் கொண்ட கொள்கை வீரன்—தளராது உழைத்திடும் தொண்டன்—கருத்தாய்ந்து திட்டமிட்டுச் செயலாற்றும் ஆற்றல் மிக்கோன்—இன்று மறைந்தான் என்றால், எப்படித்தான் இந்தத் துயரை நமது இயக்கம் தாங்குமோ தெரியவில்லை.

அருமைத் தலைவர் அண்ணாவிடம் பற்றும், கட்சிக் கட்டுமைகளில் அசைக்க முடியாத உறுதியும் கொண்டு, மாற்றுக் கட்சியினர் எல்லாம் கண்டு மருளும்படி கழகக் கொள்கையைப் பரப்பி, கழக அமைப்பைக் கட்டிக்காத்து வந்த தீரன், தூத்துக்குடி என்றாலே சாமி — என்று, இயக்கத்தவர் எல்லோரும் எண்ணும்படி உயர்ந்த செம்மல், இன்று இல்லை என்பது எண்ண முடியாத வேதனையாகிறது.

தனக்கெனத் தனி வாழ்க்கையே வகுத்துக்கொள்ளாது பொதுமக்களுக்கும், தொழிலாளிகளுக்கும் பாடுபட்ட ஒருவரை பரிதாபகரமான நிலையில் நாம் பறிகொடுத்துவிட்டோம்; இந்தத் துயரம் போக்க முடியாததுதான்; எனினும், அவர் மேற்கொண்டிருந்த அரும் பெரும் கடமைகளை மற்ற இளைஞர்களும் வீரர்களும் மேற்கொண்டு நிறைவேற்றுவது ஒன்றே நாம் ஆறுதல்பெறும் வழியாகும்.

இந்தத் துயரத்தில் மூழ்கியுள்ள நமது இயக்கத் தோழர்களுக்கும், தூத்துக்குடி மக்களுக்கும், தோழர் சாமியின் உற்றார் உறவினருக்கும், தனி நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மு. கருணாநிதி

பெருமதிப்புக்குரிய செயல் வீரர் கே. வி. கே. சாமி அவர்கள் கொடுமையாளர்களால் கொலை செய்யப்பட்டு நமது வீர வணக்கத்திற்குரியவராகி விட்டார். திருநெல்வேலிச் சீமையிலே தேடித் தேடி அலைந்தாலும் அப்படியொரு திறனுடைய தீரனைப் பெற முடியுமா என்ற ஐயம் நம் நெஞ்சை உருக்குகிறது. எதிர்பாராத இழப்பு! எண்ணச் சுத்தமற்றவர்களால்— இழிமதி கொண்டவர்களால் ஏற்பட்ட பயங்கரச் சம்பவம்! பற்றும் பாசமும் பணிவும் பண்பும் கொண்ட இயல்புடை ஒருவனை இழந்து தவிக்கும் நமக்கு யாரே ஆறுதல் பகரவல்லார்?

தொழிலாளத் தோழர்கள் தங்கள் தலைவனைப்பிரிந்து துயரக் கடலில் தத்தளிக்கின்றனர்

தூத்துக்குடி ஒரு நல்லவனை இழந்து நலிந்துகிடக்கிறது.

நமது குடும்பமோ, ஒரு பிள்ளையை இழந்து குமுறியழுகிறது.

சாமியை இழந்தோம்—அவர் கட்டிக்காத்த கொள்கைவழி இன்னும் வேகமாக நடப்போம் என்ற உறுதிபெற்று நம்மை நாமே தேற்றிக் கொண்டு 'சாமி வாழ்க!' என ஒலித்தவாறு இலட்சிய சித்தியில் நாட்டங்கொள்வதைத் தவிர வேறென்ன சொல்ல இருக்கிறது வாழ்க சாமியின் புகழ்!

பலியானோர் பட்டியலில்...!

கே. வி கே. சாமியும் இடம் பெற்றுவிட்டார்'

உடுமலையில் மு. கருணாநிதி, கே.ஏ.மதியழகன் இரங்கற் பேச்சு

22-9-56-ல் நகரில் திராவிட நாடு பிரிவினைநாள் விழாப்பொதுக் கூட்ட ஏற்பாடுகள் நீக்கப்பட்டு தோழர் சாமி அவர்களின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் அனைவரும் கருப்புச் சின்னம் அணிந்துகொண்டு ஊர்வலம் சென்று, பொதுக்கூட்டத் திடலை அடைந்ததும், தோழர் ப. நாராயணன் தலைமையில், தோழர்கள் கே. ஏ. மதியழகன், மு. கருணாநிதி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

தோழர் மதியழகன் அவர்கள், தோழர் சாமி அவர்களின் அருந் தொண்டுகளையும், கழக வளர்ச்சிக்காக அவர் ஆற்றின பணிகளையும் விளக்கினார்.

தோழர் மு கருணாநிதி அவர்கள், விடுதலை இயக்க வரலாற்றில் நாட்டின் விடுதலைக்காகப் பலியானவர்களின் பட்டியலில் சாமி அவர்களின் பெயரும் இடம்பெற வேண்டிய பரிதாப நிலையையும், அதனால் திராவிட முன்னேற்றக் கழகம் அடைந்த பெரும் இழப்பையும் குறித்துப் பேசினார்.

தோழர் இராசு அவர்களின் ஆண் மகவுக்குப் பெயரிடும்போது தோழர் கருணாநிதி, மறைந்த தோழர்கள் அழகிரி, சாமி ஆகியோரின் பெயர்களை இணைத்து 'அழகிரிசாமி' என்று பெயரிட்டார்.

பம்பாய்—அந்தேரி :

23—9—56 மாலை 4 மணியளவில் நடைபெற்ற கழகக் கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பம்பாய்—தாராவி :

23—9—56 மாலை 8 மணிக்கு தாராவி சவுந்திரபாண்டியனார்பகுத்தறிவுப் படிப்பகச் சார்பில் நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில் தோழர் சா. தர்மராசன் தோழர் சாமியின் உருவப் படத்தைத் திறந்துவைத்துப் பேசினார். மற்றும் பல தோழர்கள் பேசின பின் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மதுரை—மணிநகரம் :

23—9—56 இரவு 7 மணிக்கு, தியாகராயர் படிப்பகத்தில் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

செல்வபுரம் (கோவை) :

23—9—56-ல், செல்வபுரம் தி. மு. கழகக் கட்டிடத்தில் நடைபெற்ற பாண்டியன் படிப்பகச் செயற்குழுக் கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தேவாரம் :

23—9—56-ல் நடைபெற்ற நகர தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டத்தில் அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. கழகத் தோழர்கள் அனைவரும் கருப்புக் கொடிகளுடன் மௌன ஊர்வலம் வந்தனர். அன்று முழுவதும் உண்ணாவிரதம் இருந்து தோழர்கள் தங்கள் இறுதி மரியாதையைத் தெரிவித்தனர்.

முத்துப்பேட்டை :

22—9—'56-ல், சந்திரா போட்டோ ஸ்டுடியோவில் நடைபெற்ற மூவேந்தர் நாடக மன்றக் கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திண்டிவனம் :

திண்டிவனத்திலுள்ள இராம விலாசம் உணவு விடுதியில் பணியாற்றும் ஊழியர்கள் ஒரு நிமிட மௌனம் மேற்கொண்டு தங்கள் அனுதாபத்தையும், இறுதி மரியாதையையும் தெரிவித்தனர்.

குட்டி அரசர்களின் கூடாரம் காங்கிரஸ்!

பசத்தார் குட்டி அரசர் காங்கிரசில்சேர்ந்துவிட்டார்

அவரது எட்டு சகாக்களும் அவரைப் பின்பற்றினர்

தேர்தலில் காங்கிரசை வெற்றிகண்டவர்களுக்கு காங்கிரஸ் புகலிடமாகிறது

குட்டி அரசரின் ஆதரவு பெற்ற ஆதிவாசி சேவா சங்கமும் கலைக்கப்படுகிறது

ரெய்ப்பூர், செப். 29—

காங்கிரஸ் கட்சி மேலும் மேலும் குட்டி அரசர்களின் கூடாரமாகிறது.

பசத்தார் நிலப்பரப்பின் முன்னுள் அரசராக இருந்த பிராவீர் சந்திர பாஞ்தேவ் என்பார் முடிவாகக் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து விட்டார். சில நாட்களாக அவருடைய அரசியல் எதிர்காலம் குறித்து இருந்துவந்த யூகங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விட்டது.

மேற்படி குட்டி அரசரின் ஒத்துழைப்பின் மூலம், கடந்த பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி அபேட்சகர்களை முறியடித்து, மத்தியப் பிரதேச சட்டசபையில் உறுப்பினர்களாக உள்ள எண்மரும் பசத்தார் பகுதி மக்கள்சபை உறுப்பினராக இருந்துவரும் மோச்சாகி கோரா என்பவரும், இன்னும் சில நாட்களில் காங்கிரஸ் கட்சியில் இணைந்துவிடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்படி குட்டி மன்னரின் ஆதரவில் இயங்கி வந்திருந்த ஆதிவாசி சேவா சங்கமும், எசமான் விருப்பப்படி கலைக்கப்பட்டுவிட்டது.

பாதுகாப்புக் கைதியாக இருந்த அதன் தலைவரான வீரமாஞ்சி என்பாரும், காங்கிரஸ் கட்சியில் தஞ்சம் புகுந்துள்ளார்.

பசத்தார் அரசரை திருபர்கள் சந்தித்துக் கேட்டகாலை, தன்னுடைய அசையா சொத்துக்களை அரசாங்க ஆதிக்கத்திற்குள் கொண்டுவந்து இருப்பதை எதிர்த்து இந்திய நீதிமன்றத்தில் தாம் வழக்குத் தொடுத்திருப்பதாக அறிவித்துள்ளார்.

அதுவுமன்றி சகதலப்பூருக்குக் குடியரசுத் தலைவர் வந்திருந்த போது, அவரிடம் இதுபற்றித் தாம் முறையிட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அளிக்கும் 'உறுதி'கள் அமுலாக வேண்டுமே!

சென்னை, செப். 27—

'நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி வெட்டும் வேலை இன்னும் 3, 4 - மாதங்களில் ஆரம்பமாகும்' என்று அமைச்சர் பக்தவத்சலம், சட்ட சபையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர், தேவையான இயந்திரங்களுக்கு ஆர்டர் கொடுத்திருப்பதாகவும், எத்தகைய தொழிலாளர்கள் தேவையோ அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளப் போவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் அன்பே மதிப்பான பரிசு

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அவர் தனது மரியாதையை—மானத்தை இழக்காமல், பொதுநலச் சேவையில் ஈடுபட்டுத் தன்னுல் ஆனவரை தமிழ் நாட்டிற்குச் சேவை புரிந்து வருகிறார்.

"ஒரு காலத்தில், எங்கள் நீதிக் கட்சியில் ஏராளமான இளைஞர்கள் இருந்தார்கள்; ஆனால் பின்னர் அவர்கள் எல்லாம் விலகி விட்டனர். காரணம், அவர்கள் எல்லோரும் தங்களுக்கு விருப்பமான எல்லா வேலையும் கிடைக்கும் என்று எதிர்பார்த்தனர்; அவர்கள் எதிர்பார்த்தபடி கிடைக்கவில்லை.

"பிற்பாடு காங்கிரஸ் கட்சி நாட்டில் மும்முரமாக வேலை செய்து கொண்டிருந்த காலத்தில், கல்லூரி மாணவர்கள் உட்பட ஏராளமான இளைஞர்கள் எல்லாம் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தனர்; காரணம் சுதந்திரம் வந்த பிறகு விரும்பியன எல்லாம் தங்களுக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்த்தார்கள்; அதுவும் நடக்கவில்லை.

"அதுபோலவே, உலகத்தில் மனிதனுக்கு வேண்டியன எல்லாம் கம்யூனிஸ்டு கட்சியால் தரமுடியும் என்று நம்பி இளைஞர்கள் அங்கு சேர்ந்தார்கள்; அந்த நம்பிக்கையும் இன்று பயனற்றுப் போய்விட்டது.

"தற்காலத்தில், இளைஞர்கள் ஒரு புது இயக்கத்தில் பெரும் அளவில் சேர்ந்திருக்கிறார்கள்; அந்த இயக்கம்தான் அண்ணாதுரை கட்சி!

"இன்று நாட்டில், தமிழ் மொழியினிடத்திலும் தமிழ் நாட்டினிடத்திலும் மாணவர்களும் இளைஞர்களும் பற்று மிகக் கொண்டவர்களாக இருக்கின்றனர். இன்று மக்களிடத்திலும் மாணவர்களிடத்திலும் எங்கு பார்த்தாலும் தமிழ்ப்பற்று உண்டாகி இருப்பதைக் காண்கிறோம். இந்தப் பற்று உண்டானதற்குக் காரணம் அண்ணாதுரைதான் என்று நான் துணிந்து சொல்லுவேன்.

"சிலர், 'இந்த அண்ணாதுரை கட்சி தெய்வமில்லை என்று சொல்லுகிற கட்சி; மதத்தை எதிர்க்கும் கட்சி,' என்று கூறி, அவர்கள் செய்தத் தொண்டினை மறந்துவிடுகிறார்கள். அது சரியல்ல; அந்தக் கட்சி எப்படிப்பட்டதானாலும், அது நாட்டில் மொழிப்பற்றை வளர்த்திருக்கிறது; அவர்கள் பொருளைத் தயாரித்துத் தந்திருக்கிறார்கள். அதற்காக நாம் நன்றி செலுத்தத்தான் வேண்டும். அவர்கள் தயாரித்துக் கொடுத்த பொருளை எப்படி உபயோகப்படுத்த வேண்டும் என்பதை நாம் விவாதிக்கலாம்; ஆனால் அவர்களது சேவையை மறந்துவிடுவதற்கில்லை.

"இன்று இங்கே அண்ணாதுரையின் படத்தைத் திறந்து வைத்திருப்பதானது அவரது சேவையை அங்கீகரிப்பதாகும். மேலும், 'இன்னும் நீ சேவை செய்யவேண்டும்; மனதைத் தளரவிடாமல் தொடர்ந்து பணியாற்றவேண்டும்; தரம் குறையாமல்—பண்பு பாழாகாமல் பணியாற்ற வேண்டும்,' என்று அவரை ஊக்குவிப்பதற்காகவும் தான்!

"பொது சேவையில் ஈடுபட்டவர்களுக்கு பரிசு வேறெதுவுமல்ல; மக்களுடைய மதிப்புத்தான் வேண்டும்!

"மக்களது அன்பையும் மரியாதையையும் பெற்றிருக்கும் அண்ணாதுரை நீடூழி வாழ வேண்டும்; வாழ்ந்து, மக்களுக்குச்சேவைபல செய்ய வேண்டும்—என்று மனப்பூர்வமாக வாழ்த்துகிறேன்.

"எதிர்காலத்தில் வேலை நிரம்ப இருக்கிறது; செய்யவேண்டிய காரியங்கள் எத்தனையோ உள்ளன. எனவே, அவர், கெட்டிக்காரன் என்று பெயரெடுத்திருப்பதற்கொப்ப, எதிர்காலத்திலும் திறம்பட வேலை செய்ய வேண்டும் என்று விரும்புகிறேன்.

"இதுபோன்று, பல கட்சியினரும் உள்ள ஒரு சபையில், படத்திறப்பு குறித்து அதிகமாக எதும் கூறக்கூடாது என்று நான் கருதுகிறேன்"

என்று 26-9-56ல், வேலூர் (வ. ஆ மாவட்டம்) நகராண்மைக் கழக மண்டபத்தில் அண்ணா அவர்களது உருவப் படத்தைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் தமிழ்வேள் பி. டி. இராசன் அவர்கள் குறிப்பிட்டார்.

(நாளையும் வரும்)

கே.வி.கே. சாமி நினைவு நாள்

★

30-9-56 அனுதாபக் கூட்டங்கள்

★

குருவரெட்டியூர் :

மாலை 7 மணியளவில் மாரியம்மன் கோவில் திடலில், தோழர் ஜி எல். இராமநாதன் தலைமையில் தோழர் எஸ். எஸ். எம். சுப்பிரமணியம் பேசுவார்.

சென்னையில் :

2-வது வட்டம் :

காலை 9 மணிக்கு இராயபுரம், வெங்கடாசல நாய்க்கன் தெரு, எண் 50 இல்லத்தில், தோழர் தி. நா. மதிவாணன் தலைமையில் தோழர்கள் ந. சிவரத்தினம், கோ. வெற்றிவீரன், கே. இ. சம்பந்தம் ஆகியோர் பேசுவர்.

இராயபுரம் :

காலை 8 மணிக்கு இராயபுரம்—பனைமரத்தொட்டியிலுள்ள சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் பகுத்தறிவு மன்றத்தில் தோழர் பி. சி. இராமநாதன் தலைமையில், தோழர்கள் பலர் பேசுவர்.

16-வது வட்டம் :

காலை 9 மணிக்கு தோழர் ம. தனபால் தலைமையில் கழக இல்லத்தில் நடைபெறும். தோழர்கள் செ. சீ வாசன், டி. கே. சீனிவாசன், மோகன்ராசு, வ. சின்னசாமி, மாசிலாமணி, சுப்பிரமணி ஆகியோர் பேசுவர்.

27-வது வட்டம் :

காலை $9\frac{1}{2}$ மணிக்கு வட்டக் கழகப் பணிமனையில், தோழர் மு வ. வேலன் தலைமையில் தோழர்கள் ஆ இராசன், அன்புமணி மற்றும் பலர் பேசுவர்.

அறிவியக்க மன்றம்

காலை 10 மணிக்கு எலா கந்தப்பன் தெரு, எண் 33 இல்லம் மேற்படி மன்ற அறையில் தோழர் ஆ. ருக்மாங்கதன் தலைமையில் தோழர்கள் ஆண்டவன், தனபால், அ. சிப்பி மற்றும் பலர் பேசுவர்.

28-வது வட்டம் :

பூக்காரகர் பொம்மு செட்டி தெரு, எண் 11 இல்லத்தில் காலை 10 மணிக்கு தோழர் சி டி. டி. அரசு தலைமையில் நடைபெறும். தோழர்கள் பலர் பேசுவர்.

38-வது வட்டம் :

காலை 9 மணியளவில் தோழர் தா. துரை தலைமையில் கழக இல்லத்தில் நடைபெறும். தோழர்கள் பரதன், சண்பகவேல், கோ. அறிவழகன், ந. சுந்தரம் ஆகியோர் பேசுவர்.

39-வது வட்டம் :

காலை 10 மணியளவில் சென்னை 39-வது வட்டம் பைராக்ஜன் பகதூர் தெரு, எண் 6 பகுத்தறிவுப் பாசறையில் தோழர் அன்புவேலன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் தென்னவன், இராசா பேசுவர்.

40-வது வட்டம் :

காலை 9 மணிக்கு எண் 4 லால் பேகம் தெரு, தோழமைக் கழகப் பணிமனையில் தோழர் மா. வெ இளங்கோ தலைமையில் தோழர்கள் நிலநாராயணன், மா. செ. தா. மூர்த்தி பேசுவர்.

திருவொற்றியூர் :

காலை 9 மணிக்கு கழகப் பணிமனையில் அனுதாபக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் பலர் பேசுவர்.

கழகக் கூட்டங்கள்

★

முத்தியம்பாளையம் :

தி. மு. கழகத் துவக்க விழா
கே. வி. கே. சாமி திடலில்
1—10—56 மாலை 6 மணிக்கு
தலைவர் : வி. எம். குப்புசாமி
பேசுவோர் :
எம். எஸ். மணி
அ. பொன்னம்பலனார்

★

இடைப்பாடி :

ஆரம்பப்பாடசாலை மைதானத்தில்
2—10—56 மாலை 6 மணிக்கு
தலைவர் :
எ. கே. கே. இராசமாணிக்கம்
பேசுவோர் :
ஈ. வெ. கி. சம்பத்
எம். பி. சுப்பிரமணியம்

★

சென்னை – கோடம்பாக்கம்

தி. மு கழக 3-ம் ஆண்டு நிறைவுவிழா
சூளைமேடு (நுங்கம்பாக்கம இரயில் நிலையம் அருகில்)
2—10—56 மாலை 6 மணிக்கு
தலைவர் : கலையழகனார்
பேசுவோர் :
டி. கே. சீனுவாசன்
கோ. செங்குட்டுவன்
சா. வில்லவன்

திருக்குறள் வகுப்பு

30—9—56 காலை 10 மணிக்கு, சென்னை—வண்ணை தனலட்சுமி உயர்தர ஆரம்பப் பள்ளியில், திரு. மயிலை-சிவ. முத்து அவர்கள், 'இனியவை கூறல்' என்ற அதிகாரத்தை விளக்கிப் பேசுவார்.

தமிழர் நூல் நிலையத் திறப்பு

30—9—56 காலை 9 மணிக்கு: சென்னை—பார்பர் பிரிட்ஜ் ரோடு எண் 4-எ, தமிழ் நூல் நிலையத்தைத் திரு. டாக்டர் எம். எ. கரீம் எம்.சி. அவர்கள் திறந்து வைப்பார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★-★★★★★

கே. வி. கே. சாமி படுகொலை

சென்னையில் 30-9-56 ஞாயிறன்று

அனுதாபக் கூட்டம்—ஊர்வலம்

★

மௌன ஊர்வலம் :

மாலை 3-மணிக்கு, நேப்பியர் பார்க்கிலிருந்து

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

அவர்கள் தலைமையில் புறப்பட்டுச் செல்லும்;
முன்னணித் தோழர்கள் அணிவகுத்து வருவர்

★

மாலை 6-மணிக்கு, வண்ணை—கல்லறைத் திடலில்

அனுதாபக் கூட்டம்

நடைபெறும்.

பொதுச்செயலாளர் அவர்களும்,
மற்றும் பல தோழர்களும் பேசுவர்

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★-★★★★★★★★★

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.எ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.